பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

20 11 2025 6 45

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பால் வளம், கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு தொழில்களுக்கு 20 ஆயிரம் கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட உள்ளதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

2. ஆதார் விவரங்களை, ஆஃப்லைன் முறையில் சரிபார்ப்பதற்கான புதிய செயலி அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக இந்திய தனித்துவ அடையாள அட்டை ஆணையம் கூறியுள்ளது.

3. தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

4. சென்னை - மங்களூரு இடையே கால அட்டவணையுடன் கூடிய சரக்கு ரயில் சேவையை தெற்கு ரயில்வே அறிமுகப்படுத்தியுள்ளது.

5. மஸ்கட்டில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் பிரிவினர் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பால் வளம், கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு தொழில்களுக்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மூலம் 20 ஆயிரம் கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட உள்ளதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இந்த கழகத்தின் வருடாந்திர கூட்டத்தில் பேசிய அவர், சர்க்கரை ஆலைகள் மற்றும் பால் பண்ணை தொழிலில் பொருளாதார சுழற்சியை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மூலம் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி நான்கு மடங்கு அதிகரிக்கப்பட்டு 95 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

நாட்டிலேயே முதல் முறையாக கூட்டுறவு டாக்சி சேவையை அறிமுகப்படுத்தியதில் இந்த அமைப்பின் பங்களிப்புக்கு பாராட்டு தெரிவித்த திரு. அமித் ஷா, இதன் மூலம் ஓட்டுநர்கள் பெரிதும் பயனடைந்து வருவதாகத் தெரிவித்தார்.

<<<<>>>>

ஆதார் விவரங்களை, ஆஃப்லைன் முறையில் சரிபார்க்கும் நடைமுறையை வலுப்படுத்த ஏதுவாக, இந்திய தனித்துவ அடையாள அட்டை ஆணையம், ஆதார் செயலி ஒன்றை அறிமுகப்படுத்த உள்ளது.

இந்த செயலி, ஆதார் விவரங்களை காகித பயன்பாடற்ற முறையில் சரிபார்த்து பகிர்ந்து கொள்ள வகை செய்யும் என்று, மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த செயலி விரைவில் முறைப்படி அறிமுகப்படுத்தப்பட உள்ள நிலையில், இந்திய தனித்துவ அடையாள அட்டை ஆணையம், இதுகுறித்த கருத்தரங்கை நடத்தி, ஒத்திகை பார்த்துள்ளது.

இதில் பங்கேற்றவர்கள், புதிய செயலியின் சாதக, பாதகங்களை எடுத்துரைத்துள்ளதாக, தனித்துவ அடையாள அட்டை ஆணையத்தின் தலைமைச் செயலதிகாரி திரு. புவனேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளுக்கு தினந்தோறும் சிகிச்சைக்கு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

*சேலம் மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் பொது சுகாதார மையங்களை திறந்து வைத்துப் பேசிய அவர், அரசு மருத்துவமனைகள் மீதான மக்களின் நம்பிக்கை அதிகரித்திருப்பதே இதற்கு காரணம் என்றார்.*

*சேலம் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு 166 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டிடங்கள் கட்டப்பட்டிருப்பதுடன் மருத்துவ உபகரணங்களும் வாங்கப்பட்டிருப்பதாக திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.*

*<<<<>>>>*

*விவசாயிகளுக்கு உதவும் வகையில் மத்திய அரசு, விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.*

*இந்த திட்டத்தின் 21வது தவணைத் தொகையை பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று விடுவித்திருப்பது, சாகுபடி பணிகளுக்கு பேருதவியாக உள்ளது என்று சேலத்தைச் சேர்ந்த விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.*

*(Voice Byte - 3 Beneficiaries - 43 Sec)*

*<<<<>>>>*

*சென்னை - மங்களூரு இடையே கால அட்டவணையுடன் கூடிய சரக்கு ரயில் சேவையை தெற்கு ரயில்வே அறிமுகப்படுத்தியுள்ளது.*

*மேற்கு கடற்கரையில் இருந்து கிழக்கு கடற்கரையை இணைக்கும் இந்த சரக்கு ரயில், வாரம்தோறும் வெள்ளிகிழமைகளில் மங்களூரு சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்தும், செவ்வாய்க்கிழமைகளில் ராயபுரம் ரயில் நிலையத்தில் இருந்தும் இயக்கப்படும்.*

*சேலம், ஈரோடு, ஊத்துக்குளி, திருப்பூர், கோவை, பாலக்காடு, சொர்னூர், திரூர், கோழிக்கோடு, கன்னூர், காசர்கோடு ஆகிய ரயில் நிலையங்களில் சரக்குகளை ஏற்றி இறக்கிச் செல்லும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதன் மூலம் தமிழகம் - கேரளா இடையே காய்கறி, பழங்கள், ஜவுளி மற்றும் பல்வேறு வகையான நுகர்பொருட்கள், குறைந்த கட்டணத்தில், குறிப்பிட்ட காலத்திற்குள் சென்றடைய வகை செய்யப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.*

*<<<<>>>>*

*நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மூலம் அடுத்த ஆண்டு முதல் தினசரி 10 கோடி ரூபாய் அளவிற்கு கடனுதவி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. மதிவேந்தன் கூறியுள்ளார்.*

*நாமக்கல்லில் நடைபெற்ற கூட்டுறவு வார விழாவில் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.*

*(Voice Byte - Madhivendan - 37 Sec)*

*<<<<>>>>*

*<u>இருவரிச் செய்திகள்</u>*

*நேபாளத்தின் நீர்மின் திட்டங்களில் பங்கேற்கும் இந்திய நிறுவனங்களுக்கு உரிய ஒத்துழைப்பு அளிக்கப்படும் என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.*

------------

*பங்களாதேஷில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் 237 வேட்பாளர்கள் அடங்கிய பட்டியலை பங்களாதேஷ் தேசிய கட்சி வெளியிட்டுள்ளது.*

------------

*ஒடிசாவில் பருப்பு வகை மற்றும் எண்ணெய்வித்து போன்ற மாற்றுப்பயிர் சாகுபடியில் ஈடுபடுமாறு அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் சரண் மஜி விவசாயிகளைக் கேட்டுக்கொண்டுள்ளார்.*

------------

அசாம் மாநிலம் குவஹாத்தியில் 18 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப்பொருட்களை கடத்தி வந்த ஒருவர் எல்லைப் பாதுகாப்புப் படை மற்றும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

------------

மக்கள் நலன்சார்ந்த டிஜிட்டல் சுகாதார நடைமுறைகளை உருவாக்க இந்தியா உறுதிபூண்டுள்ளதாக, மத்திய சுகாதாரத்துறை செயலாளர் திருமதி. புன்யா சலீலா ஸ்ரீவஸ்தவா தெரிவித்துள்ளார்.

------------

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூரை அடுத்த நெட்டையாம்பாளையத்தில் சிக்கன் ரைஸ் சாப்பிட்ட சிறுமி உயிரிழந்ததையடுத்து அந்த உணவகத்திற்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

------------

சர்வதேச ஆண்கள் தினத்தையொட்டி சேலத்தில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற ஆடை அலங்கார அணிவகுப்பில் ஏராளமான ஆண்கள் பங்கேற்றனர்.

------------

சர்வதேச உலக மகளிர் தினத்தையொட்டி பெண்களின் முன்னேற்றத்திற்காக பணியாற்றியவர்களுக்கான ஔவையார் விருதுக்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 31ஆம் தேதி வரை வரவேற்கப்படுவதாக ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் திரு. சிம்ரன்ஜித் சிங் காலோன் தெரிவித்துள்ளார்.

------------

செங்கல்பட்டு மாவட்டம் மேலக்கோட்டையூரில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நீச்சல் குளம் மற்றும் டேபிள் டென்னிஸ் விளையாட்டரங்கை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.

------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் புதுஉச்சிமேடு கிராமத்தில் நடந்த கொலை வழக்கு ஒன்றில் குற்றம் சாட்டப்பட்ட 5 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து கள்ளக்குறிச்சி கூடுதல் அமைர்வு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

மஸ்கட்டில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் பிரிவினர் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் மானவ் விகாஷ் தக்கார் - Manush Utpalbai Shah இணை, ஈரானின் Hamid Shams - போலந்தின் Mateusz Zalewsai இணையை 11-9, 11-3, 11-6 என்ற செட் கணக்கில் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் Diya Paras Chitale - Swastika Ghosh இணை, போர்ச்சுகலின் Fu Yu - Jieni Shao இணையை 7-11, 13-11, 11-8, 5-11, 12-10 என்ற செட் கணக்கில் வீழ்த்தியது.

கலப்பு இரட்டையர் பிரிவிலும் இந்தியாவின் Manush Utpalbai Shah - Diya Paras Chitale இணை - சிங்கப்பூரின் Yew En Koen Pang - Jian Zeng இணையை 11-8, 11-7, 11-8 என்ற செட் கணக்கில் வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றது.

<<<<>>>>